**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 338/மா/2025

நாள் 03.03.2026

| | | |
|---|---|---|
| R. செல்வகுமார் மற்றும் R.அஜித்குமார், சென்னை–600 009. | --- | முறையீட்டு மனுதாரர்கள் |
| மண்டல அலுவலர், மண்டலம் 4 பெருநகர சென்னை மாநகராட்சி. | --- | எதிர்மனுதாரர் |

சென்னை–600 009, இராஜாஜி சாலை, B–பகுதி, அன்னை சத்யா நகர், கதவு எண் 152 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. செல்வகுமார் மற்றும் சென்னை–600 009, இராஜாஜி சாலை, B–பகுதி, அன்னை சத்யா நகர், கதவு எண் 149 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.R.அஜித்குமார் ஆகியோரின் 26.07.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.07.2025 அன்று பெறப்பட்டு 338/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரர்களின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–600 009, இராஜாஜி சாலை, B–பகுதி, அன்னை சத்யா நகர், கதவு எண் 152 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. செல்வகுமார் மற்றும் சென்னை–600 009, இராஜாஜி சாலை, B–பகுதி, அன்னை சத்யா நகர், கதவு எண் 149 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.R.அஜித்குமார் ஆகியோர் 26.07.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளனர்:–

> "சென்னை–600 118, மண்டலம்–4, வார்டு–41, கொடுங்கையூர், சந்திர சேகர் நகர், மணலி சாலை, கதவு எண் 21A என்ற விலாசத்தில் சென்னை மாநகராட்சி (GCC) மற்றும் CMDA விடம் எந்த விதமான கட்டிட அனுமதியும் பெறாமல் தரைத்தளத்துடன் (G+2) இரண்டு மாடி குடியிருப்பு வகை கட்டிடம் கட்டியது தொடர்பாக நாங்கள் பல முறை எழுத்துபூர்வமாகவும் இணையதள வழியாகவும் புகார்கள் அளித்தும் ஏழு மாதங்கள்

கடந்தும் இதுவரை சென்னை மாநகராட்சி மண்டலம்–04–ன் அதிகாரிகள் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

2. மேற்கண்ட அதிகாரிகள் நாங்கள் கொடுத்த புகாருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. நடவடிக்கை எடுக்கப்படும் என பதில் அளித்தார்கள். பின்பு விசாரணை செய்து வருகிறோம் என்று பதில் அளித்தார்கள். எனினும் தற்போது வரை சட்டப்படியான உறுதியான நடவடிக்கைகள் மட்டும் எடுக்கவேயில்லை. இதுபோன்ற அனுமதியற்ற கட்டுமானங்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்காததால் சென்னை மாநகராட்சிக்கு வரவேண்டிய விண்ணப்ப கட்டணங்கள் மற்றும் இதர தொகைகள் வராமல் வளர்ச்சி பணிகளுக்கு நிதி ஒதுக்க முடியாமல் பாதிக்கப்பட்டு வருகிறது.

3. எனவே இத்துடன் நாங்கள் சென்னை பெருநகர மாநகராட்சி அதிகாரிக்கு அனுப்பிய எங்களின் புகார்களின் நகல்களை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளோம். ஆகவே உயர்திரு. ஐயா அவர்கள் எங்களின் இந்த புகார் மனுவை கோப்பில் எடுத்து விசாரணை செய்து மேற்கண்ட அனுமதியற்ற விதிமீறல் கட்டிடம் மீதும் அதன் மீது தற்போது வரை நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீதும் சட்டப்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென தங்களை நாங்கள் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.''

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 03.10.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால், அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 07.01.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர்கள் திரு. R. செல்வகுமார் மற்றும் திரு. R.அஜித்குமார் ஆகியோர் 07.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

"சென்னை–600 118, மண்டலம்–4, வார்டு–41, கொடுங்கையூர், சந்திர சேகர் நகர், மணலி சாலை, கதவு எண் 21A என்ற விலாசத்தில் சென்னை மாநகராட்சி (GCC) மற்றும் CMDA விடம் எந்த விதமான கட்டிட அனுமதியும் பெறாமல் தரைத்தளத்துடன் (G+2) இரண்டு மாடி குடியிருப்பு வகை கட்டிடம் கட்டியது தொடர்பாக நாங்கள் பல முறை எழுத்துபூர்வமாகவும் இணையதள வழியாகவும் புகார்கள் அளித்தும் ஏழு மாதங்கள் கடந்தும் இதுவரை சென்னை மாநகராட்சி மண்டலம்–04–ன் அதிகாரிகள் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

2. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் அதிகாரிகள் நாங்கள் கொடுத்த புகாருக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்கள். தற்போது வரை உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

எனவே, மேற்கண்ட விதி மீறி கட்டப்பட்ட கட்டிடத்தின் உரிமையாளர் மீது சட்டப்பூர்வ நடவடிக்கையும் மேலும், நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீதும் உரிய நடவடிக்கை

மேற்கொள்ளுமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிந்து கேட்டுக் கொள்கிறோம்.''

5. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–லிருந்து 07.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு யாரும் ஆஜராகததால், மேற்கண்ட மனு தொடர்பாக எதிர்மனுதாரரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 30.01.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 13.01.2026 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. இதன் நகல் மனுதாரருக்கு அனுப்பப்பட்டது.

6. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி பொறியாளர் 30.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

> ''மனுதாரரின் மனுவில் குறிப்பிட்டுள்ள புகார் குறித்து இம்முறை மன்றத்தில் விளக்கம் அளிக்கும் வகையில் வேறு ஒரு தேதி வழங்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

7. எனவே, மேற்கண்ட மனு தொடர்பாக எதிர்மனுதாரரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 20.02.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 02.02.2026 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. இதன் நகல் மனுதாரருக்கு அனுப்பப்பட்டது.

8. இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4 உதவி செயற்பொறியாளர் 18.02.2026 நாளிட்ட தனது கடிதம் ம.அ.4 எண்/சிறப்பு/2026–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அதில் –

> ''கதவு எண் 21. மணலி சாலை, சந்திரசேகர் நகர், கொடுங்கையூர், சென்னை 118 என்ற முகவரியில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகளால் கடந்த 04.02.2026 அன்று கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து 10.02.2026 தேதியில் கட்டிடத்தின் உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971 பிரிவு 56(1) மற்றும் 57 R/W பிரிவு 85ன்படி பணி நிறுத்த தாக்கீது / அனுமதிக்கப்பட்ட திட்ட வரைபடத்தினை சமர்ப்பிக்குமாறு தாக்கீது வழங்கப்பட்டுள்ளது.
>
> மேலும், இப்புகாரின் மீது தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
>
> எனவே மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவம் மேற்கண்ட பதிலை ஏற்றுக் கொள்ளுமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

9. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி பொறியாளர் 20.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

> ''மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை 118, கொடுங்கையூர், சந்திரசேகர் நகர், மணலி சாலை, கதவு எண் 21 என்ற முகவரியில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு பெருநகர

சென்னை மாநகராட்சி அதிகாரிகளால் 04.02.2026 அன்று கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கட்டிடத்தின் உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971 பிரிவு 56(1) மற்றும் 57 R/W பிரிவு 85ன்படி பணி நிறுத்த தாக்கீது / அனுமதிக்கப்பட்ட திட்ட வரைபடத்தினை சமர்ப்பிக்குமாறு 10.02.2026 தேதியிட்ட தாக்கீது வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

மேற்கண்ட கட்டிட உரிமையாளரிடமிருந்து பெறப்படும் ஆவணங்களின் அடிப்படையில் மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.''.

10. மனுதாரர்களின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

சென்னை–600 118, மண்டலம்–4, வார்டு–41, கொடுங்கையூர், சந்திரசேகர் நகர், மணலி சாலை, கதவு எண் 21A என்ற விலாசத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் CMDA விடம் எந்த விதமான கட்டிட அனுமதியும் பெறாமல் தரைத்தளத்துடன் (G+2) இரண்டு மாடி குடியிருப்பு வகை கட்டிடம் கட்டியது தொடர்பாக சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் மனுக்கள் அளித்தும், தற்போது வரை நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதும், மேற்கண்ட விதி மீறி கட்டப்பட்ட கட்டிடத்தின் உரிமையாளர் மீது சட்டப்பூர்வ நடவடிக்கையும் மற்றும் நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரர்களின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை 118, கொடுங்கையூர், சந்திரசேகர் நகர், மணலி சாலை, கதவு எண் 21 என்ற முகவரியில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகளால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கட்டிடத்தின் உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971 பிரிவு 56(1) மற்றும் 57 R/W பிரிவு 85ன்படி பணி நிறுத்த தாக்கீது / அனுமதிக்கப்பட்ட திட்ட வரைபடத்தினை சமர்ப்பிக்குமாறு தாக்கீது வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்பதும், மேற்கண்ட கட்டிட உரிமையாளரிடமிருந்து பெறப்படும் ஆவணங்களின் அடிப்படையில் மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் எதிர்மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சென்னை 118, கொடுங்கையூர், சந்திரசேகர் நகர், மணலி சாலை, கதவு எண் 21A என்ற முகவரியில் கட்டப்பட்டுள்ள தரைத்தளத்துடன் (G+2) இரண்டு மாடி குடியிருப்பு வகை கட்டிடம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கட்டிடத்தின் உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971 பிரிவு 56(1) மற்றும் 57 உடன் படிக்கப்பட்ட பிரிவு 85ன்படி தாக்கீது வழங்கப்பட்டு, மேற்கண்ட கட்டிட உரிமையாளரிடமிருந்து பெறப்படும் ஆவணங்களின் அடிப்படையில் மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவிப்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம்,

1971–ன்படியும் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998–ன்படியும், அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்கள் குறித்து மாண்பமை உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்தில் வழங்கியுள்ள வழிகாட்டுதலின் அடிப்படையில், உரிய சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் மண்டல அலுவலரை அறிவுறுத்துமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. R. செல்வகுமார்,
கதவு எண் 152, அன்னை சத்யா நகர்,
B-பகுதி, இராஜாஜி சாலை, சென்னை–600 009.

(2) திரு. R.அஜித்குமார்,
கதவு எண் 149, அன்னை சத்யா நகர், B–பகுதி,
இராஜாஜி சாலை, சென்னை–600 009.

(3) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

(4) மண்டல அலுவலர், மண்டலம் 4,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண்266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை 600 021.

(5) கண்காணிப்பாளர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

5/3/26
செயலாளர்.